**செய்தி வெளியீடு எண் : 826** **நாள்: 23.05.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

அறிவியல் நகரம் 2018–19 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசின் “ஊரக கண்டுபிடிப்பாளர் விருது” வழங்கி வருகிறது.

இவ்விருது கிராமப்புற மக்களின் அறிவுத் திறனை ஊக்குவித்து பல பயனுள்ள புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளை வெளிக்கொணரும் விதத்தில் இரண்டு சிறந்த ஊரக அறிவியல் கண்டுபிடிப்பாளர்களுக்கு தலா ரூ. 1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்)-க்கான காசோலை மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

2020-21 ஆம் ஆண்டிற்கான ஊரக அறிவியல் கண்டுபிடிப்பாளர் விருதுகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் மற்றும் விதிமுறைகள் அறிவியல் நகர இணையதளம் www.sciencecitychennai.in -லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் மற்றும் அறிவியல் கண்டுபிடிப்பினை உறுதி செய்யும் ஆவணங்கள் ஆகியவை அறிவியல் நகரத்திற்கு 10.06.2022 மாலை 5.00 மணிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

***************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in